**Published on 14, Jan-2025** **ISSN: 3049-2688 (Online)**

# அலைகுடிப் பாணனின் அகவாழ்வியல் பங்களிப்பு

ல. நிவேதா
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை உயராய்வு மையம், தமிழ்த்துறை உயராய்வு மையம்
அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி
பழனி - 624 601

முனைவர் சி. யசோதா
இணைப்பேராசிரியர், நெறியாளர்
தமிழ்த்துறை உயராய்வு மையம்,
தமிழ்த்துறை உயராய்வு மையம், அருள்மிகு பழனியாண்டவர்
கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழனி - 624 601

## முன்னுரை

சங்க இலக்கியம் பழந்தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு மரபுகளை பொதிந்து வைத்திருக்கும் அரிய பண்பாட்டு கருவூலமாகத் திகழ்கிறது. பழந்தமிழரின் வீரத்தையும், காதலையும் எடுத்துரைக்கும் செவ்வியல் இலக்கியமாகவும் சங்க இலக்கியம் விளங்குகிறது. இசைக்கலைஞர்களான பாணர்கள் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் ஏராளமாக காணக் கிடைக்கின்றன. கலை என்னும் மொழியால் ஊர், நாடு என்னும் எல்லையைக் கடந்து சென்று உலவி வந்த நாடோடி கலைஞர்களாகவும் பாணர்கள் சித்தரிக்கப்பட்டுள்ளனர். குறுநிலத்தலைவர்கள், மன்னர்களையோ சந்தித்து தங்கள் திறமையை வெளிப்படுத்தி பரிசில் பெற்று வாழ்ந்து வந்துள்ளனர். அகத்திணையில் மருதத்திணைப் பாடல்கள் பாணர்களைப் பற்றி பேசியுள்ளன. தலைவன், தலைவியுடைய ஊடலைத் தணிக்கும் வாயில்களாகவும், ஏவல் மாந்தர்களாகவும் பாணர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர். சில வேளைகளில் தலைவனைப் பரத்தையரிடம் கொண்டு சேர்த்த நிலையில் தலைவியால் இகழப்படுவோராகவே பாணர்கள் இருந்துள்ளனர். இவர்கள் இசையோடும், கூத்தோடும் தொடர்புடையவர்களாக இருந்தாலும் சமுதாயத்தில் ஏற்கப்படாதவர்களாகவே இருந்துள்ளனர். இதற்கு காரணமாக அமைவது அவர்களின் வறுமை நிலையும் மிகச் சிறுபான்மைச் சமூகமாக இருப்பதையும் குறிப்பிடலாம். பண்களை குரல் வழியாகவும், யாழ் முதிய இசைக்கருவிகளை இசைத்தும் தங்கள் திறமையை வெளிப்படுத்தியுள்ளனர். பாணரை புலையன் என்று கலித்தொகை குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியங்கள் தலைவன், தலைவி, பரத்தையர் இவர்களுக்கிடையில் உறவாகவும், ஊறாகவும் ஊடாடும் ஏவல் மாந்தர்களாகப் பாணர்களைச் சித்தரிக்கின்றன.

## பாண் மரபினர்

இசையோடு வாழ்ந்த பாணர் மரபினைக் குறிக்க சங்க இலக்கியம் பல்வேறு சொற்களைப் பதிவு செய்திருப்பது எண்ணத்தக்கது. ஆகலவன், அகவுநர், அகவர், ஆடுநர், இயவர், கண்ணுளர், கலப்பையர், திணைவர், கூத்தர், கோடியர், துடியன், பரிசிலர், பறையன், பாடுநர், பாணன், பாண்மகன், பொருள், முழவன், வயிரியர், வயிரியம், ஆடுமகன், கிணைமகள், பாடினி, பாண்மகள், பாடுமகள், விறலி எனப் பல்வேறுபெயர்களைச் சங்க இலக்கியம் கூறுகிறது. இச்சொற்கள் இசைமரபின் வளத்தைக் காட்டுகிறது. கூத்தர், பொருநர், பாணர், விறலியர், கோடியர், வயிரியர் முதலிய சங்க கால நிகழ்த்துக் கலைஞர்கள் அனைவரையும் குறிப்பிடப் பயன்படும் பொதுச் சொல்லாக பாண்மரபினர் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதனை “பாணர், கூத்தர், பொருநர், விறலியர், கோடியர், வயிரியர் உள்ளிட்ட சங்க காலத்து நிகழ்த்து கலைஞர்கள் அனைவரையும் குறிப்பிடப் பயன்படும் பொதுச் சொல்லாகப் பாண் மரபினர் எனச் சுட்டப்பெறுகிறது. பாணர் மரபினர் என்பதே பாண் மரபினர் எனப்படுகிறது. பண் எனும் சொல்லின் முதல் நீண்டு பாண் எனப் பட்டது.

இது இசையோடு தொடர்புடைய கலைஞர்களைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப் பெற்றிருக்கிறது"[1] என்று காந்தி தாசன் குறிப்பிடுவதன் மூலம் அறியலாம்.

இசையோடு தொடர்புடைய கலைஞர்கள் பாண் மரபினர் அல்லது பாண் குழுவினர் எனக் குறிப்பிடப்படுகின்றனர். இப்பாண் மரபினர் ஒரு குழுவாக மெல்லிசைக் குழுக்கள், கலைக்குழுக்கள் நிகழ்த்தியும் பண்ணோடு பாடியும், இசைக்கருவிகள் இசைத்தும், கூத்து, ஆடல் நிகழ்த்தியும் தமது கலைத்திறனை வெளிப்படுத்தியுள்ளனர். சங்க காலத்து நிகழ்த்து கலைஞர்களில் பாணர் களே பெரும்பான்மைப் புலவர்களால் முன்னிறுப்படுகின்றனர். சங்க இலக்கியப் பாடல்களில் பாணார் என்ற சொல்லே அதிக அளவில் பயின்று வந்துள்ளது.

பாணர்களை பெருநில வேந்தர்களும், குறு நிலத் தலைவர்களும், திணை மக்களும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். பாணர்களுள் பெரும்பாணர், சிறுபாணர் என்ற இரு பிரிவினர் இருந்துள்ளனர். பேரியாழ் கொண்டு இசையறிவு முழுமையாகக் கைவரப் பெற்றுப் பாடியோர் சிறுபாணார் என்றும் அழைக்கப்பட்டனர். யாழிற்கு கைவழி என்ற பெயரும் குறிப்பிடப்படுகிறது. இதனால் பாணர்கள் கைவழிப்பாணர் என்றும் அழைக்கப்பட்டனர். பண்ணிசைத் துப் பாடியதால் இசைப்பாணர் என்றும் யாழ்மீட்டி இசை உருவாக்கியதால் யாழ்ப் பாணர் என்றும் அழைக்கப்பட்டனர். சங்க கால இசைக் கலைஞர்களில் பாணர்கள் சமூகத்தில் சிறப்பிடம் பெற்று வாழ்ந்தனர். பாணர் தொல்குடியில் ஒருவராக விளங்கினர். இதனை,

**"துடியன் பாணன் பறையன் கடம்பனென்று**
**இந்நான் கல்லது குடியுமில்லை"[2]**
என்ற புறநானனூற்றுப் பாடலடிகள் புலப்படுத்துகின்றன. சமூகக் கட்டமைப்பில் இந்நான்கு குடிகளும் இல்லாமல் அன்றைய சமூகம் இயங்கியிருக்க முடியாது என்றும் இவர்களே சமூகத்தின் அச்சாணியாக விளங்கினர் என்பதையும் இதன் மூலம் அறிய முடிகிறது.

கோடியர் பாணர் மரபினருள் ஒருவராவர். இவர்கள் முதுவாய்க் கோடியர், சுரம்செல் கோடியர், கடும்பறைக் கோடியர், பல் இயக்கோடியர் எனப் பலவாறாகக் குறிப் பிடப் பெறுவர். விழாக்காலத்தில் இனிய யாழிசையை எழுப்பிக் கொண்டு முழவினை ஒலித்து இனிமையாகப் பாடுவோர் ஆவர்.

பாண்சேரி

மாந்தர்களில் அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, உறைவிடம் (இருப்பிடம்) ஆகியவை உள்ளன. ஆதி மனிதன் காடு களிலும், மலைகளிலும், குகைகளிலும் அலைந்து திரிந்தான். ஆற்றங்கரைப் பகுதி யில் நாகரீகம் தோன்ற ஆரம்பித்த கால கட்டத்தில் தான் பண்டைய மனிதன் நிலை யாக ஓரிடத்தில் தங்கி வாழ முற்பட்டான். சங்க இலக்கியப் பாடல்களில் தமிழரின் வாழ்விடம் குறித்த பல்வேறு செய்திகள் இடம் பெற்றுள்ளன.

சங்க காலத் தமிழக மக்கள் நிலையான குடியிருப்புகளை ஏற்படுத்தி நாகரீகம் மிக்க சமூகமாய் வாழ்ந்துள்ளனர். இவர்களிடையே பாணர்கள் மிதவைச் சமூகமாய் வாழ்ந்துள் ளனர். நிலைத்த குடியிருப்பு ஏற்படுத்தி வாழவில்லை எனலாம். பாணர்கள் செல்லு மிடந்தோறும் ஊர்ப்பொது மன்றில்களிலும் ஊருக்குப் புறம் தற்காலிகக் குடியிருப்பு ஏற்படுத்தியும் வாழ்ந்துள்ளனர். நீர் வளம் மிகுந்த சோலைகள் நிறைந்த வைகை யாற்றின் கரையில் பாணர்கள் வாழும் குடியிருப்பை மதுரைக்காஞ்சி பெரும்பாண் இருக்கை என்று குறிப்பிடுகிறது.

**"கான்பொழில் தழீஇய அடைகரை தோறும்**
**தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்**
**கோதையின் ஒழுகும் விரிநீரர் நல்வரல்**
**அவிர்அறல் வையைத் துறைதுறை தோறும்**
**பல்வேறு பூத்திரள் தண்டலை சுற்றி**
**அழுந்குபட் டிருந்த பெரும்பாண்**
**இருக்கையும்"[3]**
என்று பூந்தோட்டங்கள் சூழ்ந்த இடத்தில் பாணர் மரபினர் வாழ்ந்தனர் என்றும் இயற்கையோடு இயைந்த வாழ்வினர் பழந்தமிழர் இசைமரபை எடுத்துரைக்கும் போது இயற்கையையும் இசையையும் ஒன்றி ணைந்தே பாணர்கள் வாழ்ந்து வந்தனர். பாணர்கள் வாழ்ந்த பகுதி பாண்சேரி எனப்பட்டது. புறநானூறு பாணர் வாழ்ந்த பகுதியை "சிறுமீன் சீவும் பாண் சேரி"[4] என்று குறிப்பிடுகிறது. பரிபாடலில் பாணர்கள் வாழ்ந்த பகுதி பாக்கம் என்றும், சேரி என்றும் கூறப்பட்டுள்ளது. வைகை யாற்றில் வந்த புதுவெள்ளம் பாணர்களின் குடியிருப்பைச் சூழ்ந்து கொண்டதைப் பரி பாடல்,

**"பாடுவர் பாக்கம் கொண்டென**
**ஆடுவர் சேரி அடைந்தென"[5]**
என்று காட்சிப்படுத்துகிறது. பாணர்கள் நிரந்தரக் குடியிருப்பில்லாது, தற்காலிகக் குடியிருப்புகளில் வாழ்ந்துள்ளனர். இக்குடி

யிருப்புகள் பெரும்பாலும் ஆற்றங்கரையோ ரத்தில் ஊருக்கு வெளியே இருந்துள்ளதை அறிய முடிகிறது.

### பாணர்களின் கலை வாழ்க்கையும், தொழில்முறையும்

பாணர்களுக்குத் தனி இடம், ஊர், நாடு என எதுவும் கிடையாது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதுதான் அவர்களின் வாழ்க்கையாக இருந்திருக்கிறது. ஊர் ஊராகச் சென்று இயற்கையையும், கடவுளை யும், மன்னனையும், நாட்டையும் பற்றிப் பாடியாடி மக்களைக் கவர்ந்து பரிசு பெற்று அவர்களின் வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். பாணர்கள் ஆடல், பாடல் முதலிய கலையைத் தொழிலாகக் கொண்டு அதனைத் தமது வாழ்வியல் சடங்குகளிலும், பொழுது போக்குகளிலும் நிகழ்த்தி வந்துள்ளனர். வாழ்வதற்காகக் கலையைத் தொழில்முறை யாகப் பயன்படுத்தி அதன்மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு வாழ்க்கையை நடத்தியப் பிரிவு வகையைச் சேர்ந்தவர்கள் தொழில் முறைக் கலைஞர்களாவர். சங்க காலத்தில் பாணர்கள் அரசரின் புகழைப் பரப்பும் ஊடகமாக தொழில்முறைக் கலைஞர்களாகச் செயல்பட்டுள்ளனர். அரசரிடம் வீரம், கொடை, புகழ் பற்றி இசைப்பாடல்களாக ஊர் ஊராகச் சென்று பாடியுள்ளனர். ஓரிடத்தில் நடக்கும் நடப்புகளைப் பிறிதொரு இடத்தில் வெளிப் படுத்தியுள்ளனர். பண்டையக் காலத்தில் பாண் மக்கள் பல்வகைச் செய்திகளை இவ்வழியிலேயே பரப்பியுள்ளனர். இதன் மூலம் அரசர்களிடமும், மக்களிடமும் பரிசுகள் பெற்றுள்ளனர். ஔவையார் அதியமான் பொருட்டு தொண்டைமானிடம் தூது சென்றார். இதனை,

**"இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்றும்
உண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயி னுடனுண்ணும்
இல்லோ ரொக்கற் றலைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே"[6]**

என்று புறநானூறு குறிப்பிடுகிறது. பெரும் பாலும் இவர்களுடைய வாழ்க்கை நிலை வறுமை வயப்பட்டதாகவே காணப்படுகிறது. தம் வறுமையைப் போக்க வள்ளல்களை நாடித் தம் சுற்றமொடு நாடுவிட்டு நாடு இடம்பெயரும் நாடோடிகளாகவே வாழ்ந்து ள்ளனர் என்பது தெளிவாகிறது.

மன்னர்களையும், பெருவேந்தர்களையும், குறுநில மன்னர்களையும், சீறூர்த் தலைவர் களையும் அண்டியே பாண் குழுவினர் வாழ்ந்துள்ளனர். பாணர்களில் ஒருசிலர் தூதுவராகவும், ஒற்றர்களாகவும், ஏவல் பணி செய்வோராகவும் இருந்துள்ளர். பாணர்கள் கருவியிசையிலும், குரலிசையிலும் வல்லவர் களாகத் திகழ்ந்துள்ளனர். இதனை,

**"இழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்சீர்க் கொளைவல் பாண
மகனும்மே"[7]**

என்ற புறநானூற்றுப் பாடல் வெளிப் படுத்துகிறது. பாணர்கள் தோற்கருவி இசைப் பதிலும் வல்லவர்களாக இருந்துள்ளனர். இதனை,

**"களிறு பெயறு வல்சிப் பாணன் கையதை
வள்ளுயிர்த் தண்ணுமை போல"[8]**

என்ற நற்றிணைப் பாடல் வெளிப் படுத்துகிறது. பாணர்கள் ஆடலையும், பாடலையும் சேர்த்து நிகழ்த்துபவர்களாக உள்ளனர். பாணர்களும், விறலியர்களும் ஆடியும், பாடியும் பரிசில் பெற்றுள்ளனர். இதனை,

**"விரை ஒலி கூந்தல் நும் விறிலியர் பின்வர
ஆடினர் பாடினர் செலினே"[9]**

கபிலர் குறிப்பிடுவதன் மூலம் அறியலாம். பாணர்கள் யாழ் மட்டுமின்றி ஆகுளி, பதலை, முழவு முதலிய வேறுவகையான வாத்தியங்களையும் வைத்துள்ளனர்.

பாணர்கள் தாம் செல்லும் வழியெங்கும் ஊர்ப் பொது மன்றல்களில் தங்கள் கலை நிகழ்வை நிகழ்த்தி மக்களை மகிழ்ச்சியுறச் செய்துள்ளனர். இவ்வாறு சங்க பாடல்கள் பல பாணர்களின் கலை வாழ்வையும் அவர் களது தொழில்முறைப் பற்றிய செய்திகளை யும் எடுத்துரைக்கிறது.

### ஆற்றுப்படையில் பாணர்கள்

தான் பெற்ற வளம், பிறருக்கும் கிடைக்க வேண்டுமென்ற எண்ணம் சங்க காலப் பாணர்களிடையே இருந்துள்ளது. பரிசு பெற்று வறுமை நீங்கப் பெற்ற கலைஞர் குழுக்கள், தங்களை எதிர்ப்படும் கலைஞர் குழுக்களிடம் தம் வளமைக்குக் காரணமான வள்ளலின் புகழ், கொடைத் தன்மையைப் பற்றி எடுத்துக்கூறி அவ்வள்ளலிடம் செல்லும் படி ஆற்றுப்படுத்தியுள்ளனர். இவ்வாறு ஆற்றுப்படுத்துவது சங்க காலக் கலைஞர் களின் மரபாகும். சிறுபாணாற்றுப்படையில் பரிசில் பெற்ற பாணன் பரிசில் பெறாத பாணனை நோக்கி,

குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பின்
நல்லியக் கோடனை நயந்தனிர் செல்லினே[10]

என்று ஆற்றுப்படுத்துகிறான். இவ்வாறு பாண் குழுக்களிடையே ஆற்றுப்படுத்தும் மரபிருந்ததைத் தொல்காப்பியர்,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்"[11]

என்று இலக்கணப்படுத்தியுள்ளார். ஆற்றுப் படுத்தும் மரபானது பாணர்களிடையே சிறப்பாக இருந்துள்ளதை ஆற்றுப்படை நூல்களின் வழியே அறிய முடிகிறது. இந்த மரபினை அடியொற்றித்தான் பத்துப் பாட்டில் செம்பாதி ஆற்றுப்படை நூல்களாக உள்ளன. "ஆற்றுப்படை என்ற ஓர் இலக்கியத்தை நாம் வேறு எம்மொழியிலும் காண முடியாது. அது தமிழுக்கே தனிச் சிறப்பாக அமைந்ததாகும்"[12] என்று சி. பால சுப்ரமணியன் குறிப்பிடுகிறார். ஆற்றுப் படுத்தும் வழக்கத்தைப் பாண் குழுவினரின் பெருமைமிகு மரபாகக் கொண்டிருந்துள்ளனர் என்பதைக் காணலாம்.

பாணர்களில் யாழ் இசை வல்லோரைச் சிறுபாணர் என்றும் பெரும்பாணர் என்றும் பிரிப்பதுண்டு. குறைந்த எண்ணிக்கை கொண்ட நரம்புகளை உடைய யாழ் சீறியாழ் எனவும், மிகுதியான எண்ணிக்கை கொண்ட நரம்புகளை உடைய யாழைப் பேரியாழ் எனவும் அழைத்தனர். சீறியாழ் இசைப்போர் சிறுபாணர் என்றும், பேரியாழ் இசைப்போர் பெரும்பாணார் என்றும் பெயர் பெற்றனர்.

"இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ"[13]
என்று சிறுபாணாற்றுப்படையும்,
இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி[14]

என்று பெரும்பாணாற்றுப்படையும் இருவகை யாழ்களைக் கூறுகின்றன.

## அக வாழ்வில் வாயில்களான பாணர்கள்

அக இலக்கியத்தில் தலைவனுக்கும், தலைவிக்கும் இடையே ஏற்படும் ஊடலைத் தீர்க்கும் வாயில்களாகவும், ஏவல் மாந்தர்களாகவும் பாணர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர். வாயில்களில் மிக நீண்ட தொலைவு பயணம் செய்து செய்தி உரைப்பதற்கு உரியவராக கூத்தரும், பாணரும் குறிக்கப்படுகின்றனர்.

"நிலம்பெயர்ந்து உரைத்தல் அவள்நிலை உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய"[15]

பிற வாயில்களை விட கூத்தரும், பாணரும் நிலம் பெயர்ந்து உரைக்கும் வாயில்களாக உள்ளனர். அக இலக்கிய வழி, அக்காலத் தமிழரின் அக வாழ்வியல் சூழலில் பாணர் இயக்கம் பற்றிய பல செய்திகளை அறிய முடிகிறது. தலைவனின் பரத்தமை ஒழுக்கம் காரணமாகசினம் கொண்ட தலைவியின் ஊடலைத் தீர்க்கும் வாயில்களாகப் பாணர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

பரத்தமை காரணமாகத் தலைவன் விடுத்த வாயிலாக வந்த பாணர்கள் தலைவி, தோழியரின் ஏச்சுகளுக்கு ஆளாகியிருக்கின்றனர் என்பதை,

"அன்னாய் இவன் ஓர் இளமா ணாக்கன்
தன்னூர் மன்றத்து என்னன் கொல்லோ
இரந்தூண் நிரம்பா மேனியொடு
விருந்தின் ஊரும் பெருஞ் செம்மலனே"[16]

இதன்மூலம் அறியமுடிகிறது. மருத நிலத்தில் பாணர்கள் ஆற்றங்கரையில் வசித்து வந்துள்ளனர். அவர்கள் வாழிடம் பாண்சேரி எனப்பட்டது. அப்பாணர்கள் ஆற்றில் மீன்பிடித்து, தம் அகன்ற மண்டை என்னும் கலனில் எடுத்து வருவர். தம் உணவிற்கு போக எஞ்சியதை, பிற மக்களிடம் கொடுத்து பண்ட மாற்றாக நெல் போன்ற தானியங்களைப் பெறுவர். 'பாணர் பசுமீன் சொரிந்த மண்டை' எனக் குறுந்தொகை (169) குறிக்கிறது.

அக இலக்கியங்களில் பரத்தையரும் பாணர் வாழ்வியலுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது. தலைவனுக்குப் பரத்தையருடன் நட்பு ஏற்படப் பாணர்கள் துணை புரிந்திருக்கின்றனர். எனவே, தலைவியரின் பெருங்கோபத்துக்கு ஆளாயிருக்கின்றனர்.

"கண்டிகு மல்லமோ கொண்க நின்கேளே
உறாஅ வறுமுலை மடாஅ
உண்ணாப் பாவையை ஊட்டுவோளே"[17]

இப்பாடலில் பரத்தையர்குலச் சிறுமியைப் பாணனின் உறவினர்களாகச் சுட்டுகிறாள் தலைவி. தலைவன், தலைவி அகவாழ்வில் தலைவன் தூதாக மட்டுமின்றி தலைவியின் தூதாகவும் பாணர்கள் செயல் புரிந்திருக்கின்றனர். மருதத்திணை வாழ்வில் மட்டுமின்றி முல்லைத்திணை வாழ்விலும் பாணர்கள் தூதுப்பணி புரிந்திருக்கிறார்கள்.

தலைவன் பிரிவால் வாடிய தலைவியைக் கண்டு மனம் பொறாத பாணன் ஒருவன் தலைவன் சென்றிருக்கும் இடத்தை அறிந்து தலைவனை அழைத்து வருகிறேன் என்று தானே முன்வந்து கனிவுடன் கூறுகிறான்.

"மையறு சுடர்நுதல் விளங்க சுறுத்தோர்

**செய்யரண் சிதைத்த செருமிகு
தானையொடு
சுதழ்பரி நெடுந்தர் அதர்படக் கடைஇச்
சென்றவர்த் தருகுவல் என்னும்
நன்றால் அம்ம பாணனது அறிவே"**[18]

தான் கூறாமலே போர் காரணமாகத் தேரேறி நெடுந்தொலைவு சென்றிருக்கும் தலைவனைக் கண்டு பேச பயணிக்கும் பாணனின் அன்புசால் அறிவைத் தலைவி போற்றுவதாக இப்பாடல் அமைந்திருக்கிறது.

பாணனும், பாடினியும் எனச் சேர்த்துக் குறிக்கப்படுவதால் அவர்கள் கணவன், மனைவி என ஊகிக்கலாம். ஆனால் அவர்களது குடும்பம், பிள்ளைகள் போன்ற எந்த ஒரு செய்தியும் சங்க இலக்கியங்களில் இடம் பெறவில்லை.

அக இலக்கியங்களில் தலைவனுக்கும், தலைவிக்கும் இடையே வாயிலாக இருக்கும் பாணர்கள் பரத்தையர், தலைவி, தோழி போன்றோரால் மிகவும் இழிவாகப் பேசப் படுவதைக் காணமுடிகின்றது. இதற்கான எதிர்வினை இருந்ததற்கான சான்றுகள் இலக்கியங்களில் இல்லை என்றே கூறலாம். இதற்கு காரணமாக அமைவது அவர்களின் வறுமை நிலையும், மிகச் சிறுபான்மைச் சமூகமாக இருப்பதையும் குறிப்பிடலாம்.

### பாணர்களின் வறுமைநிலை

பாணர்கள் மிகுந்த வறுமை வயப்பட்டவர் களாக விளங்கியதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. பாணர்களைச் சுட்டுமிடங் களிலெல்லாம் பசியும் இணைத்தே சுட்டப்படுகின்றது. தமது வறுமையைப் போக்கிக்கொண்டு வரும் பாணன் ஒருவன், வறுமையில் வாடிவரும் பாணன் ஒருவனை பேகனிடம்,

**"படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம்கோ
கடாஅம் யானைக் கலிமான் பேகன்
எத்துணை ஆயினும் ஈதல் நன்று என
பிறர் வறுமை நோக்கின்று, அவன்
கைவண்மையே"**[19]

என்று கூறி ஆற்றுப்படுத்துகிறான். பாணர் களின் வறுமை சுட்டப்பெறும் இடங்களில் வள்ளல்களைக் கண்டு மீளும் பாணர்கள் செல்வச் செழிப்புடையவர்களாக உள்ளனர். பொன்னால் செய்யப்பெற்ற தாமரைப் பூவும் மாலைகளும் சூடியவர்களாகப் பாணர்கள் காட்டப்பெறுகின்றனர். பாணர்கள் வறுமை, வளமை என்ற இருவித நிலைகளுக்கும் உரியவர்களாக இருந்துள்ளனர். பாணர்கள் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்குக் கூட்டமாகச் சென்று கலைகளை நிகழ்த்தி வந்துள்ளனர். தமது வறுமையைத் தீர்க்கும் பொருட்டு மன்னர்களை நாடியுள்ளனர். இதனால் அவர்கள் தம் இருப்பிடங்களை அடிக்கடி மாற்றிக்கொண்டு வாழ்ந்துள்ளனர். சங்க இலக்கியப் பாடல்கள் பாணர்களின் வறுமையைப் பலவாறு படம்பிடித்துக் காட்டுகின்றன. பாணர்கள் பசியின் காரணமாகப் பஞ்சடைந்த கண்களுமாய், உடல் மெலிந்து எலும்பும், தோலுமாய்ச் சுற்றத்தாருடன் கடும் பசியில் உழல்வதை,

**"உண்ணாமையின் ஊன் வாடித்
தெண்ணீரின் கண் மல்கிக்
கசிவுற்ற என் பல்கிளையொடு
பசி அலைக்கும்"**[20]

என்ற பாடடிகள் குறிப்பிடுகின்றன. பாணர் கள் இயல், இசை, நாடகமெனப் பல்துறை வல்லுநர்களாக இருந்தாலும் அவர்களின் புலமைக்கேற்ற பொருள் வளமில்லாமல் இருந்தார்கள். வறுமையில் வாடினார்கள். பெரும்பாலான பாணர்கள் வறுமை நீங்காச் சூழலிலேயே வாழ்ந்து வந்தனர் என்பதை,

**"வறுமையர் பாணர்**

**பூ இல் வறுந்தலை போல"**[21]

எனும் பாடலடிகள் பாணர்களின் வறுமை நிலையை உணர்த்துகின்றன. சிறுபாணாற்றுப் படை பாணர்களின் வறுமை நிலையினை யும், பாணனின் மனைவி வறுமையின் காரணமாகக் குப்பையில் வளர்ந்திருக்கும் குப்பை கீரையைச் சமைக்கிறாள். அதில் உப்பிற்கும் வழியில்லை என்பதாகப் பாண னின் பசித்துன்பம் காட்டப்பட்டுள்ளது.

### கீழ்க்குடிப் பாணர்கள் (பாணர்களின் சமூகத்தில் தாழ்வு நிலை)

சங்க இலக்கியங்களில் நோக்கும் போது பாணர்களில் ஒரு பிரிவினர் மீன் பிடித் தொழில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் மீன் களைத் தப்பாமல் பிடிப்பதில் வல்லவர் களாயிருந்தனர். தூண்டிலால் மீனைப் பிடிப்பதிலும் திறன் கொண்டிருந்தனர். மீன் பிடிக்கும் தூண்டில்களை மூங்கலால் செய்தனர். தூண்டில் போட்டு மீன் பிடிப்பது அல்லாமல் வலை போட்டு மீன் பிடித்த செய்தியை ஐங்குறுநூறு (48) 'வலைவல் பாண்மகன்' என்று கூறுகிறது.

நெய்தல்நிலப் பரதவர்களுக்கு மீன் பிடித்தல் என்பது முதன்மைத் தொழிலாகவே இருந்து ள்ளது. ஆனால் பாணர் சமூகத்தில் மீன்பிடி பாணர்கள் கீழ்நிலையில் இருந்துள்ளனர். இன்னும் சில பாணர்கள் வேறுபல தொழில்கள் செய்து வந்ததால் அடித்தளச் சமூகத்தாராக இருந்துள்ளனர். விலங்குகளை

வேட்டையாடி அவற்றிலிருந்து யாழுக்கு நரம்பெடுத்தனர். தோற்கருவிகளுக்குத் தோல் எடுத்தனர். பாணர்கள் புலையர் என அழைக்கப்பட்டதை,

**"துடி எறியும் புலைய!**
**எறிகோல் கொள்ளும் இழிசின"**[22]

என்ற பாடலின் வழி அறியமுடிகிறது.

மதுரை மாநகரின் புறச்சேரியை அடுத்துப் பாண்சேரி அமைந்திருந்ததாக மாங்குடி மருதனார் குறிப்பிடுவது ஏனைய மக்களை விடப் பாணர்களை இழிவாகவும், ஒதுக்குப் புறங்களில் வாழும் மக்களாயும் கருதப்பட்ட நிலையைச் சுட்டுகிறது. தொழில் முறையால் மட்டும், மக்களிடையே பாகுபாடுகள் பழங் காலச் சமுதாயத்தில் நிலவவில்லை. உயர்ந்தோர் -தாழ்ந்தோர் என வருணாசிரம வேறுபாடுகளைப் பின்பற்றிய நிலையையும் இதன்மூலம் அறிய முடிகிறது. பழங்குடி மக்களில் ஓரினமாகக் கருதப்பட்ட பாணர் குடி ஒதுக்குப்புறங்களில் வாழும் மக்களாகக் கருதப்பட்ட நிலைக்கு காரணமாக அவர் களது வறுமையும் ஒன்று என எண்ண இடமுண்டு.

## தொகுப்புரை

பாணர்கள் வாழ்வதற்காகக் கலையைத் தொழில்முறையாகப் பயன்படுத்தி, அதன் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு வாழ்க்கையை நடத்திய பிரிவு வகையைச் சேர்ந்த தொழில்முறைக் கலைஞர்களாவர்.

பாணர்கள் இனக்குழுச் சமூகமாக வாழ்ந்து ள்ளனர். நாடுதோறும் சென்று மன்னர்களை வாழ்த்திப் பாடி பரிசில் பெற்று வாழ்ந்த இவர்கள் மன்னர்களின் புகழ் பரப்பும் ஊடகங்களாகச் செயல்பட்டுள்ளனர் என்பது தெளிவாகிறது.

பாணர்களிடையே ஆற்றுப்படுத்துதல் என்கிற பெருமைமிகு மரபு இருந்துள்ளது. தான் பெற்ற வளத்தை வளம் பெறாத பாணர் களுக்குக் கூறி ஆற்றுபடுத்தியுள்ள உயர்ந்த குணம் கொண்டவர்களாக பாணர்கள் திகழ்ந்துள்ளனர்.

பாணர்கள் ஊருக்கு ஒதுக்குப்புறமுள்ள பகுதி, ஆற்றங்கரையோரம் மருதநிலம் ஆகிய வற்றில் வசித்து வந்துள்ளனர். பாணர்கள் இப்பகுதி 'மீன்சீவும் பாண் சேரி' என அழைக்கப்பட்டுள்ளதையும் காண முடிகின்றது.

அக இலக்கியங்களில் தலைமக்களிடையே தூது செல்லும் வாயில்களாகவும் பாணர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

பாணர்கள் பெருவேந்தர்களின் அரண்மனை யிலும், அரண்மனை வாயில்களிலும் குறுநில மன்னர்களின் அவைகளிலும் தமது கலை களை நிகழ்த்தியுள்ளனர். பாண் மரபினர் தாம் செல்லும் வழியெங்கும் ஊர் பொது மன்றல்களிலும் தங்களது கலை நிகழ்வை நிகழ்த்தி மக்களை மகிழ்ச்சியுறச் செய்து ள்ளனர் என்பது புலனாகிறது.

பாணர்கள் கடுமையான வறுமையினால் உணவுக்கு வழியில்லாமல் குப்பைக் கீரையை உப்பில்லாமல் உண்டு வாழ்ந்துள்ளனர். பாணர்களின் இந்த வறுமை நிலையைச் சிறுபாணாற்றுப்படை வெளிப்படுத்துவதைக் காண முடிகிறது.

பாணர்கள் பரிசிலுக்காக மட்டும் வாழ வில்லை. மன்னாகர்காகத் தூது செல்லுதல், தலைவன் தலைவியரின் ஊடலைத் தீர்த்து வைத்தல் முதலிய சமூகப் பொறுப்பு மிக்கப் பணிகளைச் செய்துள்ளனர் எனலாம்.

## குறிப்புகள்

1. க. காந்திதாசன், சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்வியல், ப. 47
2. புறநானூறு, பா. எ. 335: 7-8
3. மதுரைக்காஞ்சி, 337-342
4. புறநானூறு, பா. எ. 342: 4
5. பரிபாடல், பா. எ. 7: 31-32
6. புறநானனூறு, பா. எ. 95: 1-8
7. மேலது, பா. எ. 11: 14-15
8. நற்றிணை, பா. எ. 310: 9-10
9. புறநானூறு, பா. எ. 109: 3-4
10. சிறுபாணாற்றுப்படை, பா. அ. 267-269
11. தொல். புறத். நூ. எ. 36
12. சி. பாலசுப்ரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 56
13. சிறுபாணாற்றுப்படை, பா. அ. 35
14. பெரும்பாணாற்றுப்படை, பா. அ. 462
15. தொல். கற். நூ. எ. 28
16. குறுந்தொகை, பா. எ. 33
17. ஐங்குறுநூறு, பா. எ. 128
18. மேலது, பா. எ. 474
19. புறநானனூறு, பா. எ. 141: 1-5
20. மேலது, பா. எ. 391: 6-9
21. குறுந்தொகை, பா. எ. 119; 1-2
22. புறநானனூறு, பா. எ. 376: 14-16